1994 ஏப்ரல் 29]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பாட்டனாச்சியார் என்ற ஆறு குறுக்கே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக்கேள்வி போடவும். இது அவர் தொகுதியிலே இருக்கின்ற ஒரு கால்வாய் பிரச்சினை. உங்கள் தொகுதியிலே ஒன்றும் வராது.

வினா எண் 449, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

449—

வேதாரண்யத்தில் காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைத்தல்

** 22765—திரு. பி. வி. இராஜேந்திரன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலைப் பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளைப் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு காய்கறி மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையத்தை (Regulated Marketing Centre) வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தோட்டக்கலை பயிர்களான மா, முந்திரி மற்றும் காய்கறிகளுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையம், வேதாரண்யம் தொகுதியில் ஏற்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டப் பயிர்கள் வேதாரண்யம் பகுதியில் மட்டும் அல்ல, இன்றைக்கு பல இடங்களில் மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் பகுதி, மேகமலை பகுதி, நீலகிரி மாவட்டம் இங்கெல்லாம் இருந்து வருகிறது. இவற்றிற்கு ஒரு ரெகுலேட்டட் மார்க்கெட் வேண்டும். காரணம் எல்லா இடத்திலும் இன்றைக்கு இடையிலே கமிஷன் மண்டி இருக்கிறது. அதிலும் இன்றைக்கு அவர்கள் பெர்ஸன்டேஜ் கொடுக்கிறார்கள். அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. அவர்கள் வழியாக போகிறது அந்த காய்கறிகள். இதில் பெர்ஸன்டேஜ் கலாச்சாரம் மிக வேகமாக பரவி

[1994 ஏப்ரல் 29

இருக்கிறது. இத்தனை பெர்ஸன்டேஜ் கொடுத்தால்தான் என்று அவர்கள் அப்படி கேட்பது கூட கிடையாது, எடுத்துக்கொண்டுதான் மிச்சத்தையே வெளியே தருகிறார்கள். யார் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பணம் கிடைப்பதில்லை. அதனால் இன்றைக்கு ரெகுலேட்டட் மார்க்கெட் வரவேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால் நீங்கள் ஒட்டுமொத்தமாக இந்த தோட்டக் கலை பயிர்களை உற்பத்தி செய்கின்றவர்களை காக்கின்ற விதத்தில் இன்றைக்கு இந்த பெர்சன்டேஜ் கலாச்சாரத்தை வீழ்த்துகின்ற வகையில் தங்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வேளாண்மைத்துறை மானிய கோரிக்கையின் மீது பதில் அளிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இல்லாத காரணத்தினால் அவருக்கு வேண்டிய பதிலுரை அவருக்கு கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தோட்டக்கலை பயிர்கள் பயிரிடக் கூடிய விவசாயிகள், இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் வேளாண்மை விற்பனை வாரியமே பல நகராட்சிகளில் அந்த நகராட்சிகளுடைய ஆணையரைக் கலந்து ஆலோசித்து அவர்களே பாதுகாக்கப்பட்ட ஒரு அங்காடி கட்டி அந்த அங்காடியிலே விவசாயிகள் தாங்களே தங்களுடைய பொருள்களை எந்தவித தரகரும் இன்றி விற்பனை செய்வதற்கு வழிவகை இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, காய்கறி பழங்கள் இவற்றிற்கெல்லாம் அந்த ரெகுலேட்டட் மார்க்கெட்டில் எப்படி கையாள முடியும்? அழுகுகின்ற பொருள்களை - இன்றைக்கு மதுரை மாநகராட்சியை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது கோயம்புத்தூரிலும் சரி, நீலகிரி மாவட்டத்திலிருந்து வருகின்ற பொருள்கள் இவற்றையெல்லாம் எப்படி அந்த ரெகுலேட்டட் மார்க்கெட் கையாளும்? இந்த நடைமுறைக்குச் சாத்தியமான வழிகளை அவர் ஏற்கனவே அறிவித்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, நான் ஒரு மணி நேரம் பதில் சொன்னேன். அதிலே ஒரு வினாடிதான் இந்த பதிலை சொல்லியிருக்கிறேன். மற்றபடி நீண்ட விளக்கத்தை சொல்லியிருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு தோட்டக்கலை

1994 ஏப்ரல் 29]

பயிர்களை வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு 3 மாவட்டங்களிலே 3 குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகள் உருவாக்குவதற்காக 3 கோடி ரூபாய் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி இது வேதாரண்யம் பற்றிய கேள்வி. (குறுக்கீடு) வேதாரண்யத்தை தாண்டிப் போனால் விவரம் இல்லை என்று நான் வெளியிலே சொல்ல வேண்டி வரும். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீங்கள் என்னைக் கொஞ்சம் காப்பாற்றித் தான் ஆகவேண்டும். (சிரிப்பு) அப்படிப்பட்ட நிலைமையில் நான் இருக்கிறேன், அது உங்களுக்கும் தெரியும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பவானி சாகரிலே பழச் செடிகள் நாற்றங்கால் ஒன்றும், பழப் பண்ணை ஒன்று அமைப்பதற்கான அனுமதியை அளித்ததற்கு அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பவானி சாகர் வருகின்ற நேரத்தில் அதிகப்படியாக .. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பவானி சாகருக்கு ஒரு நன்றியோடு இருக்கட்டும். அடுத்து வேதாரண்யம் போக வேண்டும். இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி இல்லையென்றால் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு)

திரு. வி. கே. சின்னசாமி: அவர் அடிக்கடி என்னுடைய தொகுதிக்கு; குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் பவானி சாகர் பகுதியில் அதிக அளவில் இப்போது இருக்கின்ற ஹை கிரேடு வெரைட்டியான நேந்திர வாழைப்பழம், மொரீஸ் வாழைப்பழம், எல்லாம் அதிக அளவில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிர் செய்கிறார்கள். ஆனால் கடலை விற்பனைக்கு மார்க்கெட் ஒன்று நல்லமுறையில் புளியம்பட்டியில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதே அடிப்படையில் இந்தப் பழ வகைகளைக் கேரள மாநிலத்திலிருந்து வந்து பழ வியாபாரிகள் கடனாக வாங்கிச் சென்று விடுவதால் பல விவசாயிகள் இன்றைக்கு ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் நஷ்டப்பட்டு மூழ்கிப் போயிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை எல்லாம் காப்பாற்றி அல்லது மைசூருக்கு லாரிகளில் எடுத்துச் செல்கிறார்கள். அங்கே மார்க்கெட் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரி, தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பதில் சொல்லுவார். அவர் டிபார்ட்மெண்டு பற்றி என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லுவார். (குறுக்கீடு) இது வேதாரண்யம் விற்பனை மையம், இதே மாதிரி ஒரு இடத்திலே ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டாலும் பரவாயில்லை. நான் திரு. பாலசுப்பிரமணியத்திற்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா எண் 450, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) தனிக் கேள்வி போடவும்.

450—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

* ***30201***—*திரு. எஸ். சண்முகநாதன்:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதியில் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதி, மழையூர், இராமக்குடி போன்ற பகுதிகள் எல்லாம் இந்த வேளாண்மை பொறியியல் துறையின் கீழே ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரவேண்டுமென்று அந்த கோரிக்கையை நீண்ட நெடும் காலமாக அங்கே வைத்திருக்கிறது. இந்த வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் இன்றைக்கு கணக்கு